தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வருமானத்தைப் பெருக்கும் சூரியகாந்தி சாகுபடி**



குறைந்த மழையளவு உள்ள இடங்களில் நெற்பயிருக்கு பதிலாக ஒரு பருவத்துக்கு சூரியகாந்தி சாகுபடி செய்யலாம். விவசாயத்துக்கு ஆள்பற்றாக்குறை இருந்துவரும் நிலையில், குறைந்த வேலையாள்களைக் கொண்டு அதிக வருமானத்தை விவசாயிகள் பெற முடியும் என்கிறார் காட்டுப்பாக்கம் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் உதவி பேராசிரியர் (உழவியல்) பெ. முருகன். இதுகுறித்து அவர் கூறியதாவது: மானாவரிக்கு ஆடிப் பட்டமும், கார்த்திகை பட்டமும், இரவைக்கு மார்கழி, சித்திரைப் பட்டமும் சூரியகாந்தி சாகுபடிக்கு ஏற்றது. 90 முதல் 100 நாள்களில் பயிர் வைத்து, அறுவடை செய்துவிடலாம். கோ.எஸ்.எக்-2, சன்பிரிடு உள்ளிட்டப் பல ரகங்கள் உள்ளன.

**நிலம் தயாரித்தல்:** மணற்பாங்கான வண்டல், செம்மண், கருவண்டல் மண் ஆகியன சூரியகாந்தி சாகுபடிக்கு மிகவும் ஏற்றதாகும். இந்த நிலங்களை இரும்பு கலப்பையைக் கொண்டு, 2 முதல் 3 முறை நன்கு உழவு செய்ய வேண்டும். கடைசி உழவின்போது, ஒரு ஏக்கருக்கு 5 டன் மக்கிய தொழுஉரம் இட்டு மண் கட்டிகள் நன்கு உடையுமாறு உழவு செய்ய வேண்டும்.

**பார் பிடித்தல்:** 60 செ.மீ. இடைவெளியில் பார்கள் அமைக்க வேண்டும். 1 செடிக்கும் மற்றொரு செடிக்கும் 30 செ.மீ. இடைவெளியும் பாருக்கு பார் 60 செ.மீ. இடைவெளியும் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

**விதை நேர்த்தி, விதைத்தல்:** வீரிய ஒட்டு ரகம் 1 ஏக்கருக்கு 2 கிலோ போதுமானது. 1 கிலோ விதைக்கு 4 கிராம் என்ற வீதம் ட்ரேகோடெர்மா விரிடி என்ற உயிர் பூஞ்சானக் கொல்லி மருந்தைக் கலந்து பின்பு, 3 பாக்கெட் அசோஸ்பைரில்லம், 3 பாக்கெட் பாஸ்போபாக்டீரியா நுண்ணுயிர் உரத்துடன் 400 மில்லி அரிசி கஞ்சியுடன் கலந்து விதை நேர்த்திச் செய்து, பிறகு அரைமணி நேரம் நிழலில் உலர்த்திவிட்டு விதைக்க வேண்டும். விதைகளை வரிசையாக பார்களின் பக்கவாட்டில் 30 செ.மீ. இடைவெளியில், 3 செ.மீ. ஆழத்தில் ஊன்ற வேண்டும்.

**உர நிர்வாகம்:** மண் பரிசோதனையின் அடிப்படையில் உரமிடுவது மிகவும் நல்லது. இல்லையெனில் பொது உர சிபாரிசான 5 டன் மக்கிய தொழு உரத்துடன் 24 கிலோ தழைச்சத்து, 36 கிலோ மணிச்சத்து, 24 கிலோ சாம்பல் சத்து அளிக்க வேண்டும். விதை விதைப்பதற்கு முன்பு 4 பாக்கெட் அசோஸ்பைரில்லம், 4 பாக்கெட் பாஸ்போபாக்டீரியா நுண்ணுயிர் உரத்தை, 10 கிலோ தொழு உரத்துடன் கலந்து நிலத்தில் தூவ வேண்டும். விதை விதைத்தவுடன் 5 கிலோ நுண்ணூட்டச் சத்துக் கலவையை 10 கிலோ மணலுடன் கலந்து பார் இடைவெளியில் போட வேண்டும். சூரியகாந்தி பயிர் எண்ணெய் வித்து என்பதால், 8 கிலோ கந்தகச் சத்து உரத்தை மண்ணில் இட வேண்டும்.

**களை, நீர் நிர்வாகங்கள்:** பேசலின் என்ற களைக்கொல்லி மருந்தை 750 மில்லி எடுத்து 125 முதல் 150 லிட்டர் நீரில் கலந்து விதை விதைத்து, நீர் பாய்ச்சியவுடன் அதாவது 2 முதல் 3 நாள்களில் தெளிக்க வேண்டும். பிறகு விதைத்த 30-ஆவது நாள் ஒரு கைக்களை எடுக்க வேண்டும். மண் அமைப்புக்கு தகுந்தவாறு வாரம் 1 முறை நீர் பாய்ச்ச வேண்டும்.

**ஊட்டச்சத்து கலவை தெளிப்பு**: சூரியகாந்தி பூக்களின் விதைகள் நன்றாகப் பிடிக்கவும், விதைகளின் மணிகள் கெட்டியாக உருவாக்கத்துக்கும், நுண்ணூட்டச் சத்துகள், வளர்ச்சி ஊக்கிகள் தெளிக்க

வேண்டும். போராக்ஸ் 0.2 சதவீதம் (1 லிட்டர் நீருக்கு 2 கிராம்) கரைசலை பூ பூத்திருக்கும் சமயத்தில் தெளிக்க வேண்டும். பிலனோபிக்ஸ் என்ற வளர்ச்சி ஊக்கியை 20 பி.பி.எம் (250 லிட்டர் நீரில் 112 கிராம்) என்ற அளவில் விதைத்த 30-ஆவது, 60-ஆவது நாள்களில் தெளிக்க வேண்டும். துத்தநாகச் சத்து பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு 0.5 சதவீதம் (1 லிட்டர் நீருக்கு 5 கிராம்) கரைசலை விதைத்த 30, 50-ஆவது நாள்களில்தெளிக்கவேண்டும்.

**பயிர் பாதுகாப்பு:** பொதுவாக இதர பயிர்களைக் காட்டிலும் சூரியகாந்தி பயிரில் பூச்சிகள், நோய்கள் பாதிப்பு குறைவு. பாதிப்பு ஏற்பட்டால் அருகில் உள்ள வேளாண் அலுவலரைத் தொடர்பு கொண்டு, பயிர் பாதுகாப்பு முறையை மேற்கொள்ள வேண்டும்.

**அறுவடை:** விதைத்த 90 முதல் 100 நாள்களில் பூக்கள் முதிர்வடைந்து அறுவடைக்குத்தயாராகிவிடும்.

**மகசூல்:** 1 ஏக்கருக்கு சராசரியாக 1,000 முதல் 1,100 கிலோ வரை கிடைக்கும். எனவே விவசாயிகள் இந்த எளிமையான பயிரை சாகுபடி செய்து அதிக வருமானத்தைப் பெருக்க முடியும். மேலும் விவரங்களுக்கு காட்டுப்பாக்கம் வேளாண் அறிவியல் நிலையத்தை 044- 2745 2371 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்றார் முருகன்.

## உடனடி லாபம் தரும் சாமந்தி!



விவசாயிகள் தங்களுக்கு உடனே பணம் கிடைக்க மஞ்சள் சாமந்தியை பயிர் செய்து பயன்பெறலாம் என காவேரிப்பாக்கம் வட்டார தோட்டக் கலைத் துறை உதவி வேளாண் அலுவலர் வாசு தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் மேலும் கூறியதாவது: கரும்பு சாகுபடி செய்தால் சர்க்கரை ஆலைகள் உடனே பணம் தருவதில்லை,நெற்பயிர்களில் அவைகளின்

நல்ல விலையைத் தேடி செல்வது பெரிய பிரச்னையாக இருக்கிறது. இதுபோன்ற விவசாயிகளுக்கு ஒரே வழி உடனே கையில் பணம் கிடைக்கும் மலர் பயிர்களை சாகுபடி செய்வதே. இந்த மலர்கள் சந்தைக்குச் சென்றவுடன் பணம் கைக்கு வந்துவிடுகிறது. தற்போது இந்த மலர் பயிர்களில் கூடுதலாக லாபம் சம்பாதித்து கொடுப்பவை, நஷ்டம் வராத மலர் சாமந்தி. இதில் பல ரகங்கள் உள்ளன. கோ1 எம்.டி.,யூ 1,2 ஆகியவை மஞ்சள் நிற பூக்களை கொடுக்கும். கோ.2 கரும்பழுப்பு நிறத்தில் பூக்களை கொடுக்கும். சந்தைக்கு ஏற்றப்படி இவைகளை தேர்வு செய்துகொள்ளலாம்.

**மண், தட்பவெப்ப நிலை:** வடிகால் வசதியுடன் மணல் கலந்த செம்மண் நிலம் ஏற்றதல்ல. மண்ணின் கார அமிலத்தன்மை சுமார் 6.0 முதல் 7.0 வரை இருக்கவேண்டும். நீர்த் தேக்கமுள்ள வடிகால் வசதி குறைந்த, கனமாக களிமண் சார்ந்த மண் வகைகள் சாமந்தி பயிருக்கு ஏற்றவை. சாமந்தி ஒரு வெப்ப,மிதவெப்ப மண்டலப் பயிராகும். செடிகள் நீண்ட இரவு, குறுகிய பகல் கொண்ட பருவங்களில் பூக்கும்.

**நிலம் தயாரித்தல்:** நிலத்தை 2 அல்லது 3 முறை உழுது பண்படுத்திய பிறகு கடைசி உழவின்போது ஹெக்டேருக்கு 25 டன் நன்கு மக்கிய தொழு உரம் இட்டு மண்ணுடன் கலக்கிவிடவேண்டும். நிலத்தை நன்கு சமன்படுத்திய பிறகு சுமார் ஒரு அடி இடைவெளியில் பார்கள் அமைக்கவேண்டும்.

**விதையும் விதைப்பும், நடவும் :** சேர் பிடித்த இளம் தளிர்களைப் பார்களின் ஒரு பக்கத்தில் வரிசையாக செடிக்குச் செடி 30 செ.மீ இடைவெளி இருக்குமாறு நடவேண்டும். நடும்போது வேர்ப்பாகம் மடியாமல் நேராக மண்ணுக்குள் செல்லுமாறு வேர்ப்பாகம் அனைத்தும் மறையும்படி நடுதல் வேண்டும். சாமந்தியை ஜூன் - ஜூலை மாதங்களில் நடவேண்டும். பருவம் தவறி நடும்போது செடிகளில் பூக்கும் திறன் மற்றும் மகசூல் பாதிப்பு ஏற்படும். நடும் முன் வேர்பிடித்த தளிர்களை,

எமிசான் கரைசலில் (ஒரு கிராம் ஒரு லிட்டர்) தண்ணீர் கலந்த கலவையில் முக்கி நடவேண்டும். ஒரு ஹெக்டேர் நடவு செய்ய 1,11,000 சாமந்திச்செடிகள்தேவைப்படும்.

**ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை:** அடியுரமாக ஹெக்டேருக்கு 25 டன் தொழு எரு கடைசி உழவின்போது இடவேண்டும். பின்னர் செடி நடும் முன்னர் 60 கிலோ தழைச்சத்து, 120 கிலோ மணிச்சத்து, 25 கிலோ சாம்பல் சத்து கொடுக்கக்கூடிய ரசாயன உரங்களை, பார்களின் அடிப்பகுதியில் இட்டு, லேசாகக் கிளறி மண்ணினுள் மூடவேண்டும். மேல் உரமாக 60 கிலோ தழைச்சத்து கொடுக்கக் கூடிய ரசாயன உரத்தை நட்ட 30 நாள்கள் கழித்து இடவேண்டும். மறுதாம்புப் பயிருக்கும் இதே அளவுஉரம்இடவேண்டும்.

**வளர்ச்சி ஊக்கிகள்**: பூக்கள் அதிகம் பிடிக்க நட்ட 30,45 மற்றும் 60ஆவது நாட்களில் ஜிப்ரலிக் அமிலம் 50 பிபிஎம் கரைசலைத் தெளிக்கவேண்டும்.

**நீர் நிர்வாகம்**: நடுவதற்கு முன்னர் ஒரு தண்ணீர் நட்ட மூன்று நாட்களுக்குப் பின்னர் உயிர்த் தண்ணீர் பாய்ச்சவேண்டும். பின்னர் ஒரு வாரம்ஒருமுறைநீர்பாய்ச்சவேண்டும்.

**களைக் கட்டுப்பாடு, பின்செய்நேர்த்தி:** தேவைப்படும்போது களை எடுக்கவேண்டும்.செடிகள் நட்ட ஆறு வாரங்களுக்குள் நுனிக்கிளையினை ஒடித்து பக்கக் கிளைகள் வளர ஊக்குவிக்க வேண்டும்.

**மறுதாம்புப் பயிர்:** நவம்பர் மாதத்தில் நடவுப் பயிர் பூத்து ஓய்ந்துவிடும். அதன் பின்னர் டிசம்பர் மாதத்தில், செடிகளைத் தரைமட்டத்திலிருந்து வெட்டி விட்டு, களை எடுத்து, நடவுப் பயிருக்குப் பரிந்துரை செய்த அதே அளவு உரத்தினை இட்டு நீர் பாய்ச்சவேண்டும்.

**ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு இலைப்பேன், அசுவினி இலைப்புழு:** இவைகள் இலைகளில் சாற்றை உறிஞ்சி சேதப்படுத்தும். கட்டுப்படுத்த மானோகுரோட்டாபாஸ் 2 மில்லி மருந்தை ஒரு லிட்டர்

நீரில்கலந்துதெளிக்கவேண்டும்.

**வேர் வாடல் நோய் :** செடிகள் திடீரென வாடி காய்ந்து விடும். தாக்கப்பட்ட செடிகளின் வேர்கள் அழுகி காணப்படும். கட்டுப்படுத்த காப்பர் ஆக்ஸி குளோரைடு 2.5 கிராம் மருந்தை லிட்டர் நீரில் கரைத்து செடிகளைச்சுற்றிஊற்றவேண்டும்.

**இலைப்புள்ளி நோய் :** தாக்கப்பட்ட இலைகளில் பழுப்பு நிறத்தில் புள்ளிகள் தோன்றி, இலைகள் வெளுத்துவிடும். இதனால் செடிகளின் வளர்ச்சி குன்றி மகசூல் இழப்பு ஏற்படும். கட்டுப்படுத்த மேன்கோசெப் 2 கிராம் மருந்தை ஒரு லிட்டர் நீரில் கரைத்து தெளிக்கவேண்டும். **வயது:** நடவுப் பயிருக்கு 6-8 மாதங்கள், மறுதாம்புப் பயிருக்கு 4 மாதங்கள்.

**அறுவடை:** நட்ட 3 மாதங்களில் சாமந்தி அறுவடைக்கு வரும், பூக்களை சூரிய வெப்பத்திற்கு முன்னர் காலை வேளைகளில் பறிக்கவேண்டும். **மகசூல்:** ஹெக்டேருக்கு நடவுப் பயிரில் 20 டன் மலர்கள் கிடைக்கும். மறுதாம்புப் பயிரில் 10 டன்கள் கிடைக்கும்.

## விவசாயிகளுக்கு விதை கிராமத் திட்டப் பயிற்சி

ஓமலூர் அருகேயுள்ள காடையாம்பட்டி வட்டார வேளாண்மைத் துறை சார்பாக விவசாயிகளுக்கு விதை கிராமத் திட்டத்தின் கீழ் விதை உற்பத்தி பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது. இந்தப் பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குநர் அ.நாசர் தலைமை வகித்து, விதை உற்பத்தியில் பாஸ்போ பாக்டீரியா, அசோஸ் பைரில்லம் ஆகியவற்றின் பயன்பாடு பற்றி விளக்கி கூறினார். வேளாண்மை அலுவலர் மு.சம்பத் குமார் வேளாண்மைத் துறையில் உள்ள மானியத் திட்டங்கள் பற்றியும், துணை வேளாண்மை அலுவலர் பு.ரவிக்குமார் நல்விதை தேர்வு, விதை நேர்த்தி, சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றியும், வட்டார தொழில்நுட்ப மேலாளர் க.ராஜேந்திரன் பண்ணை மேலாண்மைத் திட்டத்தில் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப குறுஞ்செய்தி அனுப்புதல் பற்றியும்

எடுத்துக்கூறினார். முன்னதாக உதவி வேளாண்மை அலுவலர் ப.தண்டபாணி வரவேற்றார். இந்தப்பயிற்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். திரவ உயிர் உரமான அசோஸ் பைரில்லம் கொண்டு விதை நேர்த்தி செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. உதவி வேளாண்மை அலுவலர் மா. நடராஜன் நன்றி கூறினார். இதில் உதவி வேளாண்மை அலுவலர்கள் சி.ஞானஜோதி முருகன், ரா.முத்துசாமி,க.ராமு, அட்மா திட்டப் பணியாளர்கள் எம்.சிவக்குமார், வி.பழனியப்பன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## <u>நெல் நாற்றங்கால் தட்டுக்கள் விநியோகம்</u>

புதுச்சேரி வேளாண் துறை, பயிர் உற்பத்தி தொழில்நுட்பத் திட்டத்தின் மூலம், விவசாயிகளுக்கு நெல் நாற்றங்கால் தட்டுக்கள் வழங்கும் நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றது. கூடுதல் வேளாண் இயக்குநர் பு.ரவிபிரகாசம் நெல் நடவு இயந்திரங்கள் மூலம் நடவு செய்யும் விவசாயிகளுக்கு தேவையான நெல் நாற்றங்கால் தட்டுக்களை மானிய விலையில் வழங்கினார். துணை வேளாண் இயக்குநர் பி.கார்த்திகேயன் மற்றும் வேளாண் அலுவலர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பெண் திட்ட அலுவலர், செயல் விளக்க உதவியாளர்கள் மற்றும் ஊழியர்கள் செய்திருந்தனர். இதன் மூலம் 190 விவசாயிகள் பயன் அடைந்தனர். பொதுப்பிரிவு விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியம், தாழ்த்தப்பட்ட பிரிவு விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியம்

வழங்கப்பட்டன.

# தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### நீர்வடிப்பகுதி பயனாளிகளுக்கு பயிற்சி

திருத்தணி: மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகாம் திட்டத்தின் கீழ், பயனாளிகளுக்கு மேலாண்மை பயிற்சி, நேற்று அளிக்கப்பட்டது. திருவள்ளூர் மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகாம் திட்டத்தின் கீழ், திருத்தணி ஒன்றியத்தில் உள்ள, 10 கிராமங்களில் நீர்வடிப்பகுதி மேலாண்மை குழுக்கள் அமைக்கப்பட்டன. இந்த குழு பயனாளிகளுக்கு, திட்ட விளக்கம் மற்றும் சலுகைகள் குறித்தான பயிற்சி, நேற்று துவங்கி, நாளை முடிவடைகிறது. நேற்று, திருத்தணி ஒன்றியம், கார்த்திகேயபுரம் கிராமத்தில் பயனாளிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. ஊராட்சி மன்ற தலைவர் வெங்கடேஸ்வரலு தலைமை வகித்தார். பயிற்சியில், 50க்கும் மேற்பட்ட பயனாளிகள் கலந்து கொண்டனர். இதில், மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டு துணை இயக்குனர் முத்துகுமார், உதவி பொறியாளர் லட்சுமிகாந்தன் திட்டம் குறித்தும், நீர் ஆதார மேம்பாட்டு பணிகள், தனிநபர் விவசாயிகளுக்கு நிலப் பணிகள், வாழ்வாதார செயல்பாடு மற்றும் மகளிர் குழுகளுக்கு வட்டியில்லா கடனாகவும், சிறுதொழில் குறித்து பயிற்சி அளித்தனர்.

### கால்நடை காப்பீடு திட்டம்விவசாயிகளுக்கு அழைப்பு

ஈரோடு:கால்நடை வளர்க்கும் விவசாயிகள் பயன்பெறும் வகையில், மத்திய மற்றும் மாநில அரசின் மானியத்துடன் கூடிய கால்நடை காப்பீட்டு திட்டம், மாவட்டத்தில் நடப்பாண்டில் செயல்படுத்தப்பட

உள்ளது.விவசாயிகள் தாங்கள் வளர்க்கும் கலப்பின பசு, நாட்டு பசுவினங்கள், எருமைகளை, இத்திட்டத்தில் காப்பீடு செய்வதன் மூலம், எதிர்பாராமல் ஏற்படும் கால்நடை இழப்பினை, ஈடு செய்ய முடியும். ஒரு விவசாயி, அதிகபட்சமாக ஐந்து கறவை பசுக்கள் அல்லது எருமைகளை மானியத்துடன், ஓராண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு காப்பீடு செய்து கொள்ளலாம்.வறுமை கோட்டுக்கு கீழ்வாழும் விவசாயிகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு காப்பீடு பிரிமிய தொகையில், 70 சதவீதம் அரசு மானியமாகவும், மற்ற விவசாயிகளுக்கு, 50 சதவீதம் அரசு மானியமாகவும் வழங்கப்படும்.மாவட்டத்தில் கால்நடை பராமரிப்பு துறை மூலம், 4,800 கால்நடைகளுக்கு மார்ச் மாதத்துக்குள், காப்பீடு செய்ய திட்டமிட்டுள்ளது. பசு மற்றும் எருமை வளர்க்கும் விவசாயிகள், அரிய வாய்ப்பை பயன்படுத்தி கொள்ள வேண்டும். அருகில் உள்ள கால்நடை நிலையங்களின் கால்நடை மருத்துவர்களை அணுகி பயன்பெற வேண்டும்.

## மருத்துவ குணமுடைய பழுபாகற்காய் சீஸன் துவக்கம்

வேதாரண்யம்:நாகை மாவட்டம், வேதாரண்யம் வட்டாரத்தில் மருத்துவக் குணமுடைய பழுபாகற்காய் சீஸன் துவங்கி உள்ளது.கசப்பு தன்மையுடைய பாகற்காயில் கொம்பு பாகற்காய், மெறி பாகற்காய், பழுபாகற்காய், என பல வகை உள்ளது. இதில் பழுபாகற்காயை சைவ சமயலுக்கு மட்டுமின்றி மட்டன், கோழி, இறால் போன்ற அசைவ உணவில் சேர்த்து பயன்படுத்தினால், சுவை மிகுந்து இருக்கும் ஆரம்பத்தில் பழுபாகற்காய் கோடியக்காடு, கோடியக்கரை உள்ளிட்ட காட்டுப்பகுதியில், பறவைகள் மூலம் பரவியது. வேதாரண்யம் வட்டாரத்தைச் சேர்ந்த கத்திரிப்புலம், செம்போடை, கருப்பம்புலம் போன்ற பகுதிகளில் விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர்.இந்த பழுபாகற்காய் கிழங்கு மூலம் சாகுபடி செய்யப்படுகிறது. தோற்றத்தில் சிறிய பாலப்பழம் போல உள்ள இந்த காய்கள், இயற்கை உரத்தின் மூலம்

சாகுபடி செய்யப்படுவதால், அதிக செலவில்லை.பழுபாகற்காயை குறைந்தபட்சம், ஐந்து மாதங்கள் சாகுபடி செய்து லாபம் ஈட்ட முடியும். நவம்பர் மாதம் முதல் மார்ச் வரை. செடியில் காய் காய்க்கும், குறைந்த பட்சம், எட்டு நாட்கள் முற்றிய காய் நன்றாக சுவையாக இருக்கும். பழுபாகற்காயை விதையுடன் சேர்த்து சமைத்தால் இன்னும் சுவை கூடுதலாக இருக்கும். ஒரு செடிக்கு வாரம், ஒரு முறை இரண்டு கிலோ அளவிற்கு காய் பறிக்க முடியும்.விவசாயிகளிடமிருந்து ஒரு கிலோ, 90க்கு கொள்முதல் செய்யபட்டு கடைகளில் சில்லரையாக, 120 வரை விற்பனை செய்யப்படுகிறது. விலை அதிகமாக இருந்தாலும், பழுபாகற்காயை அசைவ சமையலுக்கு, மக்கள் விரும்பி வாங்கி செல்கின்றனர். பழுபாகற் காய் பொதுவாகவே மருத்துவக் குணமுடையது. சர்க்கரை நோய், இருதய நோய், ரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்கும் ஏற்றது, என்று சித்த மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்

## உளுந்து பாசிப்பயறு விதைப்பு அதிகரிப்பு

தேனி : தேனி மாவட்டத்தில் விவசாயிகள் நெல் தரிசில் உளுந்து, பாசிப்பயறு, நிலக்கடலை விதைத்து வருகின்றனர். இதனால் 10 ஆண்டுகளுக்கு பிறகு இதன் விளைச்சல் அதிகரிக்கும் வாய்ப்பு உருவாகி உள்ளது.தேனி மாவட்டத்தில் 30 ஆயிரம் ஏக்கருக்கும் அதிக பரப்பில் நெல் சாகுபடி முடிந்துள்ளது. 2014 ல் அதிகளவில் மழை பெய்ததால், நடப்பு ஆண்டு வரை கிணறுகளில் நீர் ஊற்று கிடைத்து வருகிறது. ஆறுகளில் தண்ணீர் வரத்து உள்ளது. கண்மாய், குளங்களில் ஓரளவு தண்ணீர் இருப்பதால் நிலத்தில் ஈரப்பதம் உள்ளது. இதனால் விவசாயிகள் இடைக்கால பயிராக நெல் தரிசில் உளுந்து, பாசிப்பயறு, நிலக்கடலை விதைத்து வருகின்றனர். இதனால் தேனி மாவட்டத்தில் 10 ஆண்டுகளுக்கு பின்னர் உளுந்து, பாசிப்பயறு விளைச்சல் அதிகரிக்கும் வாய்ப்புகள் உருவாகி உள்ளது.

**<u>வாழையில் ஊடுபயிராக அவரை வெங்காயம்: விவசாயிகள் ஆர்வம்</u>**

தேவதானப்பட்டி : தேனி மாவட்டத்தில் விவசாயிகள் வாழையில் ஊடுபயிராக அவரை, வெங்காயம், செவ்வந்தி உட்பட குறுகிய கால பயிர்களை சாகுபடி செய்து வருகின்றனர். பெரியகுளம் தாலுகா மேல்மங்கலம், சங்கரமூர்த்திபட்டி, குள்ளப்புரம், முதலக்கம்பட்டி, வைகைபுதூர், ஜெயங்கலம், லட்சுமிபுரம், சருத்துபட்டி, வட புதுப்பட்டி, தேவதானப்பட்டி, கீழவடகரை உட்பட பல்வேறு கிராமங்களில் வாழை சாகுபடியின் பரப்பளவு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. வாழை உயரமாக வளர்ந்து 4 மாதங்களுக்கு பிறகு சூரிய ஒளி நிலத்தில் படுவது தடுக்கப் படுகிறது. இந்தக்கால கட்டத்தில் வாழைக்குள் தட்டை, அவரை, வெங்காயம், செவ்வந்திப் பூ உட்பட பல்வேறு குறுகிய காலப்பயிர்களை சாகுபடி செய்யப்படுகின்றன. இதனால் விவசாயிகளுக்கு கூடுதல் வருவாய் கிடைத்து வருகிறது. விவசாயிகள் கூறுகையில், "வாழை நடவு செய்து அறுவடைக்கு வருவதற்கு 10 மாதங்கள் முதல் 12 மாதங்கள் வரை ஆகிறது. இந்த இடைப்பட்ட காலங் களில் ஊடுபயிராக குறுகிய காலப்பயிர்கள் சாகுபடி செய்வதால் வருவாய் கிடைக்கிறது. இதனால் ஊடுபயிர் சாகு படியில் அதிகளவில் ஆர்வம் காட்டி வருகிறோம்,' என்றனர்.

**<u>தமறாக்கியில் "தர்பூசணி' சொட்டு நீரால் சாத்தியம்</u>**

சிவகங்கை : சிவகங்கை அருகே தமறாக்கியில் சொட்டு நீர் பாசன முறையில் "தர்பூசணி' விளைச்சலில் விவசாயிகள் ஈடு பட்டுள்ளனர். சிவகங்கை அருகே தமறாக்கி, கண்டாங்கிபட்டி, கூட்டுறவுபட்டி, சாலூர், சிவல்பட்டி, தாணிப்பட்டி உள்ளிட்ட கிராமங்களில் காய்கறி, கீரை, வாழை, மிளகாய் சாகுபடி செய் துள்ளனர். இப்பகுதி மக்கள் "சீசனுக்கு' ஏற்றவகையில் சாகுபடி செய்து வருவதில் கவனம் செலுத்துவர்.

விளைச்சல்: கோடை வியாபாரத்திற்கு அறுவடை செய்யும் நோக்கில், தமறாக்கி பகுதியில் விவசாயிகள் "தர்பூசணி' சாகுபடியில் ஈடு பட்டுள்ளனர். மழை போதிய அளவு இல்லாத நிலையில் கிணற்றில் நீர்வற்றி,நீர்நிலைகளில் மழை நீர் தேங்காமல், வறண்டு விட்டன. இச்சூழலில், சொட்டு நீர் பாசன முறையில் "தர்பூசணி' விளைச்சலில் ஈடுபட்டு வருகின்றனர். தமறாக்கி பர்மா காலனி பகுதியில் அதிகளவில் "தர்பூசணி' விளைச்சல் நடக்கிறது.

## வெளிநாடு மோகத்தை மறந்து விவசாயத்தில் அக்கறை தேவை; கலெக்டர் பேச்சு

சிவகங்கை : ""வெளிநாட்டு மோகத்தை மறந்து விவசாயத்தில் அக்கறை செலுத்த வேண்டும்," என சிவகங்கை கலெக்டர் முனுசாமி பேசினார். நாலுகோட்டையில் எலி ஒழிப்பு முகாம் நடந்தது. கலெக்டர் தலைமை வகித்தார். ஊராட்சி தலைவர் மாசிலா மணி மணிகண்டன் முன்னிலை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குனர் தனபாலன் வரவேற்றார். குன்றக்குடி வேளாண்மை ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் சி.சங்கர் எலி ஒழிப்பு குறித்து செயல்விளக்கம் அளித்தார். ஒன்றிய தலைவர் பாஸ்கரன், வேளாண்மை இணை இயக்குனர் (பொறுப்பு) சுதர்சன், துணை இயக்குனர் கணேசன், அழகப்பன், வேளாண்மை அலுவலர் லயோலா அன்புக்கரசி, பி.டி.ஓ., பரமசிவம், ஊராட்சி தலைவர்கள் முத்துமணி, சுப்பிரமணி, லட்சுமி மாரி பங்கேற்றனர். கலெக்டர் பேசியதாவது: இங்கு விவசாய பணிகளில் ஈடுபட மக்கள் ஆர்வம் காட்டுவதில்லை. மாறாக வெளிநாடு மோகத்தில் தான் இருக்கின்றனர். வெளிநாடு மோகத்தில் அங்கு சென்று கூலி வேலை செய்வதை விட, நம் மாவட்டத்தில் விவசாய பணியில் ஈடுபடலாம். இங்கு 200 அடியில் தண்ணீர் கிடைக்கிறது. மாற்று யோசனைகளை சிந்தித்து விவசாய

உற்பத்தியில் முன்னுரிமை வழங்கவேண்டும். வேளாண்மை அதிகாரிகள், விவசாயிகளுக்கு முழு ஒத்துழைப்பினை வழங்க வேண்டும், என்றார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## <u>கொச்சியில் சர்வதேச தேங்காய் சந்தை மையம் தமிழகத்தில் 100 ஏக்கரில் சிறப்பு வளாகம்</u>



கொச்சி : கேரள மாநிலம் கொச்சியில், சர்வதேச தேங்காய் சந்தை மையமும், தமிழகத்தில் சிறப்பு மையம் அமைக்கப்படவுள்ளது என்று கேரள மாநில தேங்காய் மேம்பாட்டு வாரியத்தின் தலைவர் டி.கே.ஜோஸ் தெரிவித்துள்ளார். 'ஆசிய மற்றும் பசிக் தேங்காய் உற்பத்தி நாடுகளின்' (ஏபிசிசி) 51வது மாநாடு கொச்சியில் கடந்த 2ம் தேதி தொடங்கியது. இதில், சர்வதேச தேங்காய் சந்தை மையத்தையும், தமிழகத்தில் சிறப்பு மையத்தையும் அமைப்பதற்கான பரிந்துரை முன்வைக்கப்பட்டதாக கேரளமாநில தேங்காய் மேம்பாட்டு வாரியத்தின் தலைவர் டி.கே.ஜோஸ் தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், 'இதற்கான ஒப்புதல் ஏபிசிசி அமைப்பு வழங்கும் என்று காத்திருக்கிறோம். இந்த அமைப்பில் உள்ள நாடுகள் தான் 90 சதவீத அளவிற்கு உற்பத்தி செய்து தேங்காயை உலகளவில் விற்பனை செய்து வருகிறது. ஆனால் விலை நிர்ணயம் என்பது வாங்குபவர்கள் முடிவு செய்வதாக உள்ளது. இவற்றை யெல்லாம் கருத்தில் கொண்டுதான் இந்த சந்தை மையத்தை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, சர்வதேச தேங்காய் சந்தைக்கான மையத்தை கொச்சியிலும் சிறப்பு மையத்தை தமிழகத்திலும் அமைக்கப்படவுள்ளது. இதற்காக நூறு ஏக்கர் நிலத்தை வழங்குவதாக

தமிழக அரசு ஒப்புக்கொண்டுள்ளது. மத்திய அரசு 60 கோடி ரூபாய் நிதி உதவி, மனித வளம் மற்றும் தொழில்நுட்ப வசதிகளையும் வழங்கவுள்ளது' என்றார்.

<u>மார்க்கெட்டுக்கு புதுமஞ்சள் வரத்து துவக்கம்</u>

ஈரோடு, : கர்நாடகாவிலிருந்து ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டிற்கு புதுமஞ்சள் வரத்து துவங்கியுள்ளது. ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டிற்கு தமிழகம் மற்றும் கர்நாடகாவின் நஞ்சன்கூடு, குண்டல்பேட்டை, சாம்ராஜ் நகரம், மைசூர், மாண்டியா போன்ற பகுதிகளில் விளையும் மஞ்சள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. ஆண்டு தோறும் ஜனவரியில் கர்நாடகாவிலிருந்து ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டிற்கு புதுமஞ்சள் வரத்து துவங்கும். தமிழகத்தை பொருத்தவரை பிப்ரவரி இறுதியில் தான் புதுமஞ்சள் சீசன் துவங்கும். தற்போது கர்நாடகாவில் மஞ்சள் சீசன் துவங்கியுள்ளதையடுத்து புதுமஞ்சள் வரத்து துவங்கியுள்ளது. அதன்படி, ஈரோடு செம்மாம்பாளையத்தில் உள்ள தனியார் மஞ்சள் மார்க்கெட்டிற்கு 380 மூட்டை புது மஞ்சள் வரத்தானது. புதுமஞ்சளை வியாபாரிகள் ஆர்வத்துடன் வாங்கி சென்றனர். பொதுவாக புதுமஞ்சளுக்கு பழைய மஞ்சளின் விலையை விட குறைவா கவே வியாபாரிகளால் விலை நிர்ணயம் செய்யப்படும். ஆனால், நேற்று நடந்த மஞ்சள் ஏலத்தில் புதுமஞ்சளின் விலை ஏறத்தாழ பழைய மஞ்சளுக்கு இணை யாகவே இருந்தது. புதுமஞ்சளுக்கு ஓரளவு கட்டுபடியான விலை கிடைப்பதால் நேற்று 275 மூட்டை புதுமஞ்சள் விற்பனையானது. புதுமஞ்சள் வரத்து குறித்து வெளி மார்க்கெட் வியாபாரிகள் கூறியதாவது: வழக்கமாக கர்நாடகாவில் டிசம்பர் இறுதியில் மஞ்சள் அறுவடை துவங்கி பாலீஷ் செய்து, அவற்றை உலர வைக்கும் பணியை முடித்து ஜனவரி இறுதியில் இருந்து விற்பனைக்காக ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டிற்கு புதுமஞ்சள் கொண்டு வரப்படும். அதன்படி கடந்த வாரத்தில் இருந்து புதுமஞ்சள் வரத்து துவங்கி விட்டது. திங்கட்கிழமை 100 மூட்டை புதுமஞ்சள்

மட்டுமே வரத்தான நிலையில், செவ்வாய்கிழமை (நேற்று) 380 மூட் டை புதும ஞ்சள் வரத் தாகி, 275 மூ ட்டை விற்பனையானது. புதுமஞ்சளுக்கு ஓரளவு நியாயமான விலையையே வியாபாரிகள் நிர்ணயித்துள்ளனர். ஈரோடு வெளி மார்க்கெட்டில் நேற்று ஈரோடு விரலி புதுமஞ்சள் ரகம் அதிகபட்சமாக ரூ.8099க்கும், குறைந்தபட்சமாக ரூ.6491க்கும், கிழங்கு ரகம் அதிகபட்சமாக ரூ.7525க்கும், குறைந்தபட்சமாக ரூ.6196க்கும் விலை போனது. அதே சமயம் பழைய மஞ்சளின் விலை, புதுமஞ்சளின் விலையை விட கூடுதலாக விலை போனது. விரலி ரகம் அதிகபட்சமாக ரூ.8021க்கும், குறைந்தபட்சம் ரூ.5834 க்கும், கிழங்கு அதிகபட்சமாக ரூ.7527க்கும், குறைந்தபட்சம் ரூ.5634 க்கும் விலை போனது. ஈரோடு அரசு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தை பொருத்தவரை தொடர்ந்து பழைய மஞ்சள் வரத்தே நீடிக்கிறது. விரலி அதிகபட்சமாக ரூ.8269க்கும், குறைந்தபட்சம் ரூ.7099க்கும், கிழங்கு மஞ்சள் அதிகபட்சமாக ரூ.6899க்கும், குறைந்தபட்சம் ரூ.6009க்கும் விலை போனது. ஈரோடு அரசு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தை பொருத்தவரை ஈரோடு மற்றும் தமிழகத்தின் பிற பகுதிகளில் புதுமஞ்சள் சீசன் துவங்கும் போது தான் புதுமஞ்சள் வரத்தாகும். இவ்வாறு வியாபாரிகள் கூறினர்.

**<u>கோவையில் விரைவில் நவீன வசதியுடன் பன்முக கால்நடை</u>**

மருத்துவமனை கோவை, : கோவை டவுன்ஹாலில் கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குநர் அலுவலகத்தில் கால்நடை மருத்துவமனை உள்ளது. பழுதடைந்த நிலையில், உள்ள மருத்துவமனையில் ஆடு, மாடு, எருமை, குதிரை, நாய், பூனை, கோழி போன்ற கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க போதுமான வசதி இல்லை. இந்த வளாகத்தில் இடியும் நிலையில் உள்ள கட்டிடங்கள் இடித்து விட்டு 1.73 கோடி ரூபாய் செலவில் புதிய மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய பன்முக கால்நடை மருத்துவமனை அமைக்கப்படவுள்ளது. இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொதுப்பணித்துறையினர் கட்டிடம் கட்டுவது குறித்து டெண்டர் விட்டு பின்னர் கட்டடம் கட்டும் பணிகள் துவங்க

வுள்ளது. மேலும், கோவில்பாளையம் பகுதியில் கால்நடை மருத்துவ மனை அமைக்கப்படவுள்ளது. இந்த பன்முக மருத்துவமனை 24 மணிநேரமும் செயல்படுத்த முடிவுசெய்யப்பட்டுள்ளது. இதில் எக்ஸ்ரே லேப், அறுவைசிகிச்சை பிரிவு உள்ளிட்டவையும், நவீன கருவிகள் கொண்டு கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கவும் முடிவு செய்யப் பட்டுள்ளது என மாவட்ட கால்நடைபராமரிப்பு துறை இணை இயக்குனர் (பொறுப்பு)பெருமாள்சாமிதெரிவித்தார்.

**மழை வெயில் பாதிக்காத குதிர்கள்**

திருச்சி மாவட்டம் துறையூர் அருகில் உள்ளது பச்சமலை. இங்குள்ள மலை வாழ் மக்கள் பெரும்பாலும் விவசாயத்தை தொழிலாக செய்து வருகின்றனர். தற்போது படித்து அரசு வேலைக்கு பலர் சென்று விட்டாலும், இங்குள்ளவர்கள் பெரும் பகுதியில் இன்றும் விவசாயமே செய்து வருகின்றனர். மரவள்ளி கிழங்கு, மா, நெல், பலா போன்ற பயிர்கள் விவசாயம் செய்யப்படுகிறது. இவர்கள் தானியத்தை சேமிக்க மண்ணால் செய்யப்பட்ட குதிர்களையே பயன்படுத்தி வருகின்றனர். எலி தொல்லை இல்லாமல் இருக்க வீட்டின் அருகில் கல்லின் மீது குச்சிகளை வைத்து அதன் மேல் மண்சுவர் எழுப்பி மேல்புறம் கீழே புற்களை வைத்து கூரை அமைக்கின்றனர். அதன் ஒரு பகுதியை தானியம் கொட்ட திறக்கும் வகையில் அமைக்கின்றனர். குருதுவின் கீழ் சிறிய துவாரம் அமைத்து அதன் மூலம் தானியத்தை வெளியே எடுக்கின்றனர். மழை வெயில் பாதிக்காத வண்ணம் இந்த குதிர் அமைக்கப்பட்டுள்ளது.

**கரூர் மாவட்டத்தில் அதிகளவில் கம்பு பயிர் சாகுபடி**

கரூர், : கரூர் மாவட்டத்தில் கிணற்றுப் பாசனம் மூலம் அதிகளவில் அதிகளவில் கம்பு சாகுபடி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்தின் முக்கிய பயிர்களில் ஒன்றான கம்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பயிரிடப்பட்டு வருகிறது. தமிழகம் முழுவதும் நெல் பயிருக்கு அடுத்தபடியாக சிறு தானியங்கள் வகைகளை சேர்ந்த அனைத்து ரகங்களும் அனைத்து மாவட்ட பகுதிகளிலும் ஆண்டு

இலக்காக கொண்டு பயிரிடப்பட்டு வருகிறது. கரூர் மாவட்டத்தில் சிறுதானிய பயிர்கள் உப்பிடமங்கலம், வெள்ளியணை, சேங்கல், ஜெகதாபி, குருணி குளத்துப்பட்டி, காணியாளம்பட்டி, கூடலூர், செல்லாண்டிப்பட்டி போன்ற பகுதிகளில் பரவலாக பயிரிடப்பட்டு வருகிறது. இதில், கம்பு வகையை சேர்ந்த ரகங்கள் கரூர் மாவட்டத்தில் ஆயிரத்துக்கும் அதிகமான எக்டேர் பரப்பில் பயிரிடப்பட்டு வருகிறது. நவம்பர், டிசம்பரில் பயிரிட்டு, பின்னர் அறுவடை காலத்தில் கம்பு ரகங்கள் அறுவடை செய்யப்படும் என்பதால் உப்பிடமங்கலத்தை சுற்றிலும் உள்ள விவசாயிகள் இந்த தானியப்பயிரை ஆர்வத்துடன் தங்கள் நிலங்களில் விளைவித்து வருகின்றனர்.

## புதுகை மாவட்டத்தில் தேவைக்கேற்ப கூடுதல் நெல் கொள்முதல் நிலையம்

புதுக்கோட்டை, : புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில் நடப்பு 2014-15 காரிப் ஆண்டுக்கு 31 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் தேவைக்கேற்ப கூடுதல் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட உள்ளதாகவும் கலெக்டர் கணேஷ் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது: இதன்படி, கறம்பக்குடி தாலுகாவில் வெள்ளாளவிடுதி, மழையூர், ராங்கியன்விடுதி, கலியராயன்விடுதி, காட்டாத்தி, ஆலங்குடி தாலுகாவில் ஆலங்குடி, எல்.என்.புரம், நெடுவாசல், வல்லத்திராக்கோட்டை, அறந்தாங்கி தாலுகாவில் மங்களநாடு, சுப்ரமணியபுரம், மேற்பனைக்காடு, அமரசிம்மேந்திரபுரம், வல்லவாரி, துரையரசபுரம், நாகுடி, கண்டிச்சாங்காடு, திருவப்பாடி, வீவரிவயல், ஆவுடையார்கோவில் தாலுகாவில் திருப்புனவாசல், தீயத்தூர், பொன்பேத்தி, அமரடக்கி, மீமிசல், மணமேல்குடி தாலுகாவில் நிலையூர், சிங்கவனம், கானாடு, சாய்குடி, கந்தர்வக்கோட்டை தாலுகாவில் புதுப்பட்டி (மட்டாங்கால்), குளத்துநாயக்கன்பட்டி

குளத்தூர் தாலுகாவில் கீரனூர் ஆகிய 31 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் இதுவரை 29ம் தேதி வரை 720 மெ. டன் நெல், விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேலும் தேவைக்கேற்ப கூடுதல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட உள்ளன. சன்னரக நெல் ஊக்கத் தொகையுடன் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1470 வீதமும், பொது நெல் ஊக்கத் தொகையுடன் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1410 வீதமும் 17 சதவிகித ஈரப்பதத்திற்கு உட்பட்டு கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. எனவே, விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய் நெல்லை இங்கு விற்பனை செய்து பயன் பெற்றுக்கொள்ளலாம் என்றார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வேளாண்மை பல்கலைக்கழகம் சார்பில் குமரி விவசாயிக்கு விருது**



தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் வேளாண் பெருவிழா மதுரை வேளாண் பல்கலைக் கழகத் தில் நடந்தது. இதில் குலசேகரம் அருகே அண்டூர் கிராமத்தை சேர்ந்த விவசாயி பிரதீப் குமாருக்கு சிறந்த பழப்பயிருக்கான விவசாய விருது வழங்கப்பட்டது. இவரை, பேச்சிப்பாறை தோட்டக்கலை ஆராய்ச்சி மையம் மற்றும் திருப்பதிசாரம் அறிவியல் மையத்தின் தலைவர் சுஜாதா, திட்ட ஒருங் கிணைப்பாளர் இருளாண்டி ஆகியோர் பரிந்துரை செய் தனர். இதற்கான பரிசளிப்பு விழா மதுரை வேளாண் பல்கலைக் கழகத்தில் நடந்தது. நிகழ்ச்சி யில், பல்கலைகழக துணை வேந்தர் ராமசுவாமி, விரிவாக்க இயக்குனர் பொன்னுசாமி ஆகியோர்

முன்னிலை வகித்த னர். மதுரை பாராளுமன்ற உறுப் பினர் கோபால் கிருஷ் ணன் விருதை வழங்கினார். குமரி மாவட்டத்தில் இருந்து விருது பெற்ற விவசாயி பிரதீப்குமாரை அன்னாசி மகசூல் உற்பத்தி விவசாய மையம், தோட்டக் கலை ஆராய்ச்சி மையம், அண்டூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம், வேளாண்மை தொழில்நுட்ப மையம் மற்றும் விவசாயிகள் பாராட்டினர்.

**கள்ளக்குறிச்சி வாரச்சந்தையில் ரூ.1½ கோடிக்கு பருத்தி மூட்டைகள் விற்பனை**



கள்ளக்குறிச்சி வாரச் சந்தையில் ரூ.1½ கோடிக்கு பருத்தி மூட்டைகள் விற்பனைசெய்யப்பட்டது.

பருத்திவாரச்சந்தை

கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் புதன் கிழமைதோறும் பருத்தி வாரச்சந்தை நடைபெறும். இந்த பருத்தி சந்தைக்கு கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், தியாகதுருகம், சின்ன சேலம், மற்றும் கடலூர், பெரம்பலூர் மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள் தங்களது விளைநிலங்களில் அறுவடை செய்யும் பருத்திகளை மூட்டை களாக்கி விற்பனை செய்வதற் காக கொண்டு வருகின்றனர். அவ்வாறு கொண்டு வரும் பருத்தி மூட்டைகளை வெளிமாவட்டங்களில் இருந்து வரும் பருத்தி வியா பாரிகள் மொத்தமாக கொள்முதல் செய்து எடுத்துச் செல்வது வழக்கம். அதன்படி நேற்று கள்ளக் குறிச்சி வேளாண்மை உற்பத்தி யாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடை பெற்ற பருத்தி வாரச்சந்தைக்கு பல்வேறு பகுதிகளை சேர்ந்த 1,272 விவசாயிகள் தங்களது விளை நிலங்களில் மானா வாரியாக பயிர் செய்த பருத் தியை அறு வடை செய்து சுமார் 9 ஆயிரத்து 913 பருத்தி மூட்டை களை விற்பனைக்காக கொண்டு வந்தனர்.

ரூ.1½ கோடிக்கு விற்பனை இந்த வாரச்சந்தையில் விழுப்புரம், கும்பகோணம், மகுடஞ்சாவடி, கொங்கணா புரம், திருப்பூர், அவிநாசி,

விருதுநகர் மாவட்டம் கோவில் பட்டி, புஞ்சை புளி யம்பட்டி ஆகிய பகுதிகளை சேர்ந்த பருத்தி மொத்த கொள்முதல் வியா பாரிகள் நேரில் வந்து எல்.ஆர்.ஏ. பருத்தி ரகம் குவிண்டால் ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.3,849-க்கும் குறைந்த பட்சமாக ரூ.3,630-க்கும், சுவின் ரகம் குவிண்டால் ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.4,239-க்கும் குறைந்த பட்சமாக ரூ.3,739-க்கும் விலை நிர்ணயம் செய்து மொத்தம் ரூ.1 கோடியே 50 லட்சத்திற்கு பருத்தி மூட்டை களை வாங்கிச் சென்றனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

## <u>18 வயது மாட்டின் 15 லிட்டர் பால்: ஆச்சரியம் தரும் மதுரை விவசாயி</u>



சில்லறைச் செலவுக்குக் கோழி முட்டைகள் கை கொடுக்கும். விருந்தினர் உபசரிப்புக்குக் கோழி விற்ற காசு உதவும். குழந்தைகளின் கல்விச் செலவைப் பால் மாடு பார்த்துக் கொள்ளும். திருமணச் செலவு என்றால், பசுக்களை விற்கலாம். அதனால்தான், ஏழை விவசாயிகளின் ஏ.டி.எம். என்று கால்நடைகளைக் கூறுகிறார்கள். பசு ஆண்டுதோறும் ஈன்றால்தான் விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும். அதற்கு மாட்டை நன்றாகப் பராமரிக்க வேண்டியது அவசியம் என்பது கால்நடை மருத்துவர்களின் அறிவுரை. அந்த ஆலோசனையுடன் அவர்கள் உதாரணமாகச் சுட்டிக்காட்டுவது அலங்காநல்லூர் விவசாயி ர.பார்த்திபனைத்தான். இவரது பசு ஆண்டுக்கு ஒன்று வீதம் 13 கன்றுகளை ஈன்றிருக்கிறது.

**மாடுதான் செல்வம்**

"வங்கிக்கடனில் நான் வாங்கிய பசு ஒன்று, 1997-ம் ஆண்டு பிப்ரவரி 1-ம் தேதி ரெட்டைக் கன்றுகளை ஈன்றது. அந்தக் கன்றுகளில் ஒன்றுதான் இந்தப் பசு. 3 வயதில் முதல் கன்றை ஈன்ற இந்தப் பசு, 2004, 2005- ஆண்டுகளைத் தவிரத் தொடர்ந்து ஆண்டுதோறும் பொங்கல் திருநாளையொட்டிக் கன்றுகளை ஈன்று வருகிறது. கடைசியாக இந்த மாதம் 13-வது கன்றை ஈன்றிருக்கிறது. அது மட்டுமல்ல, தினமும் காலையில் 8 லிட்டர், மாலையில் 7 லிட்டர் பால் தருகிறது. இந்தப் பசு வந்த பிறகுதான் எங்கள் வீட்டில் கால்நடை செல்வம் பெருகியது. எனவே, இதற்கு எங்கள் குலத் தெய்வம் பெத்தனாட்சியின் நினைவாகப் பெத்தா என்று பெயரிட்டுள்ளோம். கால்நடை மருத்துவர்களின் ஆலோசனைப்படி, 3 மாதத்துக்கு ஒருமுறை குடல்புழு மருந்து கொடுப்பதுடன், அவ்வப்போதுத் தடுப்பூசி போடுகிறேன். பால் கொடுக்கும் காலங்களில் தினமும் 100 மில்லி வீதம், 10 நாட்களுக்கு வாய்வழி கால்சியம் கொடுப்பதோடு, 30 கிராம் மினரல் மிக்ஸ்சரும் தருகிறேன். எவ்வளவு கஷ்டப்பட்டாவது தினமும் 10 கிலோ பசுந்தீவனத்தைக் கொடுத்துவிடுவேன். இப்போது என் வீட்டில் பெத்தா, அவளது மகள் பெரிய கருப்பு, பேத்தி சின்ன கருப்பு, கொள்ளு பேத்தி குட்டி பெத்தா என்று 4 தலைமுறை மாடுகள் இருக்கின்றன.

**விருது கொடுக்கலாமே!**

பெத்தாவுடன் சேர்த்து வீட்டில் 7 பால் மாடுகள் இருக்கின்றன. சுழற்சி முறையில் குறைந்தது 5 மாடுகளிலாவது பால் இருக்கும். பண்ணை களுக்குப் பால் ஊற்றுவதில்லை. லிட்டர் 36 ரூபாய்க்கு எனச் சில்லறைக்கு விற்கிறேன். சொட்டுத் தண்ணீர்கூடச் சேர்க்க மாட்டேன் என்பதால், தினசரிக் காலையிலும் மாலையிலும் 30 பேர் வீடு தேடி வந்து பால் வாங்குகிறார்கள். மாதம் 50 ஆயிரத்துக்குக் குறையாமல் வருமானம் வரும். எனவே, எவ்வளவு பண நெருக்கடி வந்தாலும் பசுக்களைப் பராமரிக்கத் தவறுவதில்லை. என்னுடைய இளைய மகனும் கால்நடை

மருத்துவம் படிப்பதில் ஆர்வமாக இருக்கிறான்" என்றவர், ஒரு வேண்டுகோளையும் முன்வைக்கிறார். “ஒரு ஏக்கர் நிலத்தில் 3 மாதம் கடும் உழைப்பைக் கொடுத்து அதிக விளைச்சல் எடுக்கிற விவசாயி களுக்கு அரசு விருது வழங்குகிறது. 18 ஆண்டுகள் ஒரு பசுவைச் சிறப்பாக வளர்த்துள்ள என்னைப் போன்ற விவசாயிகளுக்கும், அது போன்ற விருது கொடுத்தால் கால்நடை வளர்ப்போருக்கு ஊக்கம் தருவதாக இருக்கும்” என்கிறார்.

**கைவிடாத பசு**

அலங்காநல்லூர் அரசு கால்நடை மருத்துவர் ரவிச்சந்திரனிடம் பார்த்திபனின் மாடுகளைப் பற்றி கேட்டபோது, "விவசாயி பார்த்திபன் வீட்டில்தான் நானும் பால் வாங்குகிறேன். பசுவின் கர்ப்பக் காலம் 9 மாதமும் 1 வாரமும். கன்று ஈன்ற 45 நாட்களுக்குப் பிறகு மாடு மீண்டும் இனப்பெருக்கத்துக்குத் தயாராகும். நன்றாகப் பராமரிக்கப்படும் மாடுகள் மட்டுமே ஆண்டுதோறும் கன்றுகள் ஈனும். பொதுவாகப் பசுக்கள் 10 கன்றுகளுக்கு மேல் ஈனாது என்பதால், ஆறேழு கன்றுகள் ஈன்றதுமே மாடுகளை விற்றுவிடுவார்கள். ஆனால், பார்த்திபன் பசுவைக் கைவிட வில்லை. பசுவும் அவரைக் கைவிடவில்லை. பசுவின் ஆயுட்காலம் சராசரியாக 16 ஆண்டுகள். ஆனால், 18 வயதிலும் இந்தப் பசு தினமும் 15 லிட்டர் பால் கொடுப்பது, பராமரிப்புக்குக் கிடைத்த வெற்றி என்றுதான் சொல்ல வேண்டும்" என்றார். **விவசாயி ர.பார்த்திபன், தொடர்புக்கு: 9865870439**

## மகசூல் கொழிக்கும் 'கோலியாஸ்' ஏக்கருக்கு ரூ. 1 லட்சம் வருமானம்



தமிழக நெற்களஞ்சியத்துக்குச் சொந்தக் காரர்களான தஞ்சைப் பகுதி விவசாயிகள் 'கோலியாஸ்' கிழங்கு விவசாயத்தில் இப்போது கொடி கட்டிப் பறக்கிறார்கள். கேரட் வடிவில் பழுப்பு நிறத்தில் இருக்கும் 'கோலியாஸ்' மருத்துவக் குணம் கொண்டது. கோலியாஸ் செடியின் இலை, தண்டு, கிழங்கு மூன்றிலிருந்தும் ஃபோர்ஸ்கோலி (Forskohlii) என்ற மருத்துவ மூலப்பொருள் எடுக்கப்பட்டு, குறிப்பிட்ட சில மாத்திரை, மருந்துகள் செய்யப் பயன்படுத்தப்படுகிறது. ரத்தத்தைச் சுத்திகரித்தல், ரத்தத்தில் ஆல்கஹாலின் அளவை கட்டுப்படுத்துதல் ஆகியவற்றுக்காகத் தரப்படும் மாத்திரைகளில் கோலியாஸ் மூலப்பொருளாகப் பயன்படுத்தப் படுகிறது. தமிழகம் முழுவதும் பதினைந்து வருடங்களுக்கு முன்பு சேலம் ஆத்தூர் பகுதியில் முதன்முதலாகப் பயிரிடப்பட்ட கோலியாஸ், இப்போது ஈரோடு, திருப்பூர், நாமக்கல், திண்டுக்கல் உள்ளிட்ட பத்துக்கும் மேற்பட்ட மாவட்டங்களில் பயிரிடப்படுகிறது. ஓரளவு தண்ணீர் வசதியும் எளிமையான பராமரிப்பும் இருந்தால்போதும் என்பதால் இப்போது தஞ்சை பகுதி விவசாயிகளும் கோலியாஸை பயிரிட ஆரம்பித்திருக்கிறார்கள். ''நெல், கரும்புக்குப் போடுற மாதிரி அதிகமா உரம் போடத் தேவையில்லை. ஆடு, மாடு எதுவும் இந்த இலையைக் கடிக்காது. இருபது நாளைக்கு ஒரு தடவ லேசா தண்ணீர் விட்டா போதும். ஆறு மாசத்துல மகசூல் எடுத்துடலாம். ஏக்கருக்குச் சுமார் 20 ஆயிரம் ரூபாய் செலவாகும். பத்து டன் வரைக்கும் மகசூல் கிடைக்கும். டன்னுக்குப் பதினஞ்சாயிரம் கிடைக்கிறதால, எல்லாச்

செலவும் போக ஏக்கருக்கு ஒரு லட்ச ரூபாய் நமக்கு நிக்கும்'' என்கிறார் வல்லம் அருகே அய்யாசாமிபட்டியில் கோலியாஸ் பயிரிட்டிருக்கும் விவசாயி அசோக்.

**செலவும் மானியமும்**

"நாத்துகள் மூலமே கோலியாஸ் மறு உற்பத்தி செய்யப்படுகிறது. அறுவடைக்கு முன்னதாகப் பதியன் முறையில் இந்த நாத்துகளை நாமே உருவாக்கிக்கொள்ள முடியும். தேவைப்பட்டால் சேலத்திலிருந்து நாங்களே நேரடியாக நாத்துகளை சப்ளை செய்வோம்'' என்கிறார் அருள் ஹெர்பல் நிறுவனத்தின் சேலம் மண்டல மேலாளர் செல்வம். ஒரு ஏக்கரில் 16 ஆயிரம் நாத்துகளை நட முடியும். இதன் மொத்த விலை 3,500 ரூபாய்தான். நாற்று விற்பனை செய்யும் நர்சரி நிறுவனங்களே விவசாயிகளுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு கிழங்கு, தண்டு, இலை களை நேரடியாகக் கொள்முதல் செய்துகொள்கின்றன. இதனால், விளைச்சலை வண்டி ஏற்றி விற்க வேண்டிய அவசியமும் விவசாயி களுக்கு இல்லை. கோலியாஸ் பயிரிட ஏக்கருக்கு ரூ. 3,450 அரசு மானியம் தருகிறது என்பது கூடுதல் தகவல். **விவசாயி அசோக்,**

**தொடர்புக்கு: 9047542854**

<u>**தண்ணீருக்கு அஞ்சாத கார்நெல்**</u>



பாரம்பரியமான நெல் ரகங்களில், அதிக மழை நீர் தேங்கும் பள்ளமான நிலங்களில் சாகுபடி செய்யக்கூடிய ஒரே ரகம் கார் நெல். இந்த ரகம் நூற்றி இருபது நாள் வயதுடையது. சிவப்பு நெல், வெள்ளை அரிசி, நடவு செய்ய மட்டுமே ஏற்ற ரகம். பயிர் வளர்ந்து பச்சை பிடித்துவிட்டால் அதன்பிறகு பதினைந்து நாட்களில் நீர் அதிகரித்தால்கூடக் கவலைப்பட வேண்டியதில்லை. காரணம் இந்த நெல் ரகம் தண்ணீருக்கு உள்ளேயே

பூத்து, பால் பிடித்து, கதிர் முற்றி முழு வளர்ச்சியும் அடைந்து விளையக் கூடியது. இதன் வைக்கோல் அடர்த்தியாகவும் கம்பீரமாகவும் இருப்பதால் தண்ணீரில் வாரக் கணக்கில் இருந்தால் கூட அழுகிப் போகாது.

**நீரிலும் முளைக்காது**

இடுப்பளவு தண்ணீர் இருந்தால்கூட இந்த நெல் ரகத்தை அறுவடை செய்து, கதிர்களைக் கயிறு கட்டி களத்துக்கு எடுத்துவருவார்கள். சூழ் நிலைக்கு ஏற்ப ஈரமாக இருந்தால்கூட, அது காயும்வரை களத்து மேட்டில் மூடிவைத்திருப்பார்கள். ஆனால், ஈரத்திலும்கூட நெல் முளைக்காது. இந்தச் சூழ்நிலை வாரக் கணக்கில்கூட இருக்கலாம். இந்த நெல் மறு ஆண்டு ஆடிப் பட்டத்தில் மட்டுமே முளைக்கும் தன்மை கொண்டது.

பாரம்பரிய நெல்லில் நடுத்தர ரகமாகவும் மத்திய கால பயிராகவும் இது உள்ளது. குறைந்தது ஏக்கருக்கு இருபத்தி நான்கு மூட்டைவரை மகசூல் கிடைக்கும். ரசாயன உரங்களும் பூச்சிக்கொல்லிகளும் இதற்குத் தேவையில்லை. இயற்கையில் கிடைக்கும் சத்துகளைக் கிரகித்துக்கொண்டு விளைந்து மகசூல் கொடுக்கக்கூடியது.

**சுவையான அவல்**

இந்தக் கார்நெல் ரகம் சாப்பாட்டுக்கும் பலகாரங்களுக்கும் ஏற்றது. குறிப்பாக, கார் அவல் சிறப்பு வாய்ந்த ஒன்றாகக் கருதப்படுகிறது. சிவப்பு அரிசியாக இருப்பதால் நீரிழிவு நோய், வாதம் தொடர்பான நோய்கள், கரப்பான் போன்ற நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுகிறது.

*நெல் ஜெயராமன் தொடர்புக்கு: 94433 20954.*